
PLAY
WITH
PRIDE
கையேடு

# 1 பாலின உணர்வு ஒவ்வொருவருக்கும் வேறுபட்டது.

பெண்மை மற்றும் ஆண்மை என்பது வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு விஷயங்களைக் குறிக்கிறது. ஒவ்வொருவரும் பாலினத்தை வித்தியாசமாக அனுபவித்து வெளிப்படுத்துகிறார்கள். மக்கள் தங்களை ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ அல்லது, இருபாலாகவோ மற்றும் பால் அற்றவராகவோ கூட அடையாளம் செய்துகொள்ள முடியும்.







பாலினம் என்பது ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட ஆழமான கருத்து. ஒருவருடைய பாலின அடையாளம் என்னவாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்வதும் அதை மதிப்பதும் மிக முக்கியமானது

நம் பாலினத்தை நாம் மட்டுமே தீர்மானிக்க முடியும்

# 2 பயமில்லாமல் கேட்கலாம் !

ஒருவரின் பாலின அடையாளத்தை, குறிப்பாக அவர்கள் உருவத்தோற்றம்  அல்லது அவர்கள் பயன்படுத்தும் பெயர்கள் போன்றவற்றைக் கொண்டு ஊகம் செய்யாமல் இருப்பது முக்கியம். சந்தேகம் இருக்கும்போது ஒருவர் என்ன பிரதிபெயர்களை விரும்புகிறார் என்று அவரிடமே கேட்க பயப்பட வேண்டாம்.





இருப்பினும், அந்த நபரின் பாலின அடையாளத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்வது அல்லது பகிர்ந்து கொள்ளாதது முற்றிலும் அந்நபரின் தனிப்பட்ட முடிவு ஆகும்.அவ்வாறான சூழ்நிலைகளில் அவர்களின் முடிவையும், தனிஉரிமையையும் மதித்து நடப்பது முக்கியம்.

# 3 உங்கள் மொழிப் பயன்பாட்டைப் பற்றி சிந்தியுங்கள்

’வாங்க டா/டி’, ’பசங்களா/பொண்ணுகளா வாங்க=, போன்ற பாலின விகுதியுடைய சொற்றொடர்கள் விளையாட்டு மைதானத்தில் பொதுவாகக் பயன்படுத்தப்படுகின்றன. இந்த பாலின விகுதி அடையாளங்களுக்குள் பொருந்தாத நபர்களை இந்த சொற்றொடர்கள் விலக்க முனைகின்றன.




ஒவ்வொருவரும் தாங்களாகவே இருக்க வசதியாக உணரும் சூழலை உருவாக்குவதில் இந்த வாக்கியங்களை மிகவும் பாலின நடுநிலையாக மாற்றுவது மிக முக்கியம்.



# 4 குழு/ அணி அமைப்புகளை தீவிரமாக மாற்றி அமைக்கவும்

பயிற்சிகள்/செயல்பாடுகளுக்கு பாலினத்தின் அடிப்படையில் குழு/ அணி பிரிப்பது அவசியமா? திருநர் / (பாலின) ஈர்மறைக்கு அப்பாற்பட்ட வீரர்களுக்கு கழுவும் அறைகள் / உடை மாற்றும் அறைகள் வழங்க முடியுமா?






குழு/ அணியில் உள்ள அனைவரும் தீவிரமாகவும், வெளிப்படையாகவும் தங்கள் ஆதரவைக் காட்ட வேண்டும். விளையாட்டை அனுபவிப்பதில் இதுபோன்ற சிறு விஷயங்கள் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

# 5 அனைவரையும் உள்ளடக்கிய குழு/ அணி நடத்தை விதிகளை உருவாக்கவும்

தெளிவான நடத்தை நெறிமுறை அணிகளின் மதிப்புகளை கோடிட்டுக் காட்டும். மொழி, பயிற்சி முறை, குழு கலாச்சாரம் போன்றவற்றின் அடிப்படையில் அதன் வீரர்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது பற்றி அணிகள் சிந்திக்க இது ஒரு வாய்ப்பாகும்.




வீரர்கள், பயிற்சியாளர்கள், துணை ஊழியர்கள் போன்றவர்கள் உட்பட ஒட்டுமொத்த அணியையும் ஒன்றிணைக்கும் பயிற்சியாக இது இருக்கலாம்.



# பொதுவான சொற்களஞ்சியம்

பாலினம் மற்றும் அதன் வெவ்வேறு அம்சங்களைப் பற்றிய இந்த உரையாடலைத் தொடங்க உங்களுக்கு உதவும் சில விதிமுறைகள் மற்றும் வரையறைகள் இங்கே உள்ளன.

## பாலின அடையாளம்

ஒரு நபரின் பாலினம் பற்றிய அவர்களின் ஆழமான உள்ளுணர்வு.

இரட்டை விகுதி அல்லாதோர், பெண், ஆண், திருநங்கை, பாலற்றோர், மற்றவை



## பால்

பொதுவாக பிறப்பின் போது ஒரு நபரின் வெளிப்புற உடற்கூறியல் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை ஆண், பெண் அல்லதுஊடுபால்பண்புடையவர பன்முக பால்பண்பு உடையவர் என வகைப்படுத்துவது

ஆண், பெண், ஊடுபால்பண்புடையவர், பன்முக பால்பண்பு உடையவர்

## பாலீர்ப்பு

ஒருவருக்கு இன்னொருவரின் மீது பாலினம்/ பாலியல் அடையாளத்தின் அடிப்படையில் ஏற்படும் உடல் மற்றும்/அல்லது உணர்ச்சிப்பூர்வமான ஈர்ப்பு அல்லது காதல்.

தற்பால் ஈர்ப்பாளர், எதிர்பால் ஈர்ப்பாளர், இருபால் ஈர்ப்பாளர்,பாலீர்ப்பு

## Play with Pride பற்றி

இது LGBTQIA+ நபர்களை விளையாட்டு சூழலில் உள்ளடக்கியதாக உணர வைப்பதில் மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் ஒரு முயற்சி. இது அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட 4 LGBTQIA+ நபர்களுடனான நேர்காணல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விளக்கப்படக் கதைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டது. www.playwithpride.in இல் இக்கதைகளை நீங்கள் பார்த்து தெரிந்துக்கொள்ளலாம்.

## About People's Ultimate League (PUL)

இது பாரம்பரியமாக விளையாட்டிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட  நபர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு அடிமட்ட முயற்சி. PUL இன் அணுகுமுறையானது "அல்டிமேட் ஃபிரிஸ்பீ" என்னும்  85 க்கும் மேற்பட்ட நாடுகளில் விளையாடப்படும் கலப்பு-பாலின, சுய-பரிந்துரை கொண்ட, குறைந்த உடல் தொடர்பு கொண்ட , குழு விளையாட்டை தழுவி உருவாக்கப்பட்டது.

## ONSIDE நிதி பற்றி

ONSIDE ஃபண்ட் பெண்ணிய அமைப்புகளையும், அது சார்ந்த உயர் உள்ளூர் தீர்வுகளையும் ஆதரிக்கிறது. பெண் குழந்தைகள், பெண்கள்* மற்றும் இரட்டை விகுதி பாலின அடையாளம் அல்லாதவர்கள் விளையாடுவதற்கான அவர்களின் உரிமையைப் பயன்படுத்துவதற்கு ஆதரவளிக்க குழுக்கள் கட்டுப்பாடற்ற நிதிகளை அணுகுகின்றன. இதனால் அடிமட்டத்திலிருந்து உலகம் வரை அனைத்து மட்டங்களிலும் விளையாட்டில் பாலின சமத்துவத்தை நிலைநிறுத்துகிறது.